விஜயபாரதம்
06.09.2020 மலர் - 1, இதழ் - 154 VIJAYABHARATHAM DAILY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

# மினி பாகிஸ்தானாகும் தமிழகம்

சென்னையில் என்.ஐ.ஏ அமைப்பு தௌபீக் என்பவரை சமீபத்தில் கைது செய்தது. இவர் நாம் மனிதர் கட்சி, முஸ்லிம் பாதுகாப்பு படை, இறைவன் ஒருவனே என சில இயக்கங்களை நடத்தி வருகிறார். இதன் மூலம் தமிழகத்தில் ஜிஹாதிகளின் நாசவேலை, மூளை சலவை, நிதி திரட்டுதல்களுக்கு உதவியுள்ளார். இவரது கூட்டாளிகள் இம்ரான், சிக்கந்தர், அப்துல்காதர் ஆகியோர் தமிழகத்தில் ஆள் கடத்தல், பணம் பறிப்புகளை செய்து வந்துள்ளனர். தௌபீக்கின் மனைவி சல்மா வங்கதேசத்தவர். போலி குடியுரிமை ஆவணத்துடன் இங்கு வசித்துள்ளார். இவர் திருச்சியில் கைது செய்யபட்டுள்ளார். தௌபீக் மும்பை குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டவர் என்பது குறிப்பிடதக்கது.

திமுக ஹிந்துக்களை மதவாதிகளாக சித்தரிக்கும். ஆனல் மதசார்பின்மை எனும் போர்வையில் கிருஸ்துவ, முஸ்லிம்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும். அவர்களின் தவறுகளை கண்டுகொள்ளாது. இது அனைவருக்கும் தெரியும். ஆனால் எடப்பாடி தலைமையிலான அதிமுகவும் தற்போது இதையே பின்பற்றுகிறது. சமீப காலமாக ஹிந்து இயக்கத்தினருக்கு அச்சுறுத்தல்கள் அதிகமாகியுள்ளன. காவல்துறை வேடிக்கை பார்க்கிறது. அரசோ தமிழகம் அமைதிப்பூங்கா என காதில் பூ சுற்றுகிறது. கோவை, சென்னை உட்பட பல இடங்களில் பயங்கரவாதிகளை மற்ற மாநில என்.ஐ.ஏ, சி.பி.ஐ அதிகாரிகள்தான் இதுவரை கைது செய்துள்ளனர். அப்படியெனில் இங்குள்ள உளவுத்துறை என்ன செய்கிறது, அதன் கைகளை கட்டிப்போட்டது யார் எனும் கேள்வி எழாமல் இல்லை. இனியாவது அரசு விழித்துக்கொள்ளட்டும். இந்த நிலை தொடர்ந்தால் தமிழகம் தாலிபான்களின் கூடாரமாகலாம்.

நல்லா இருந்த தமிழகமும், குட்டி சுவராக்கிய திராவிடமும்.

# உ.பி.யில் இருந்து ஒரு எம்.பி



பாஜக சார்பில் ராஜ்ய சபா உறுப்பினராக சையத் சபர் என்ற இஸ்லாமியர் உ.பி'யில் இருந்து போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இவர் பாஜகவின் தேசிய செய்தி தொடர்பாளர். சிறந்த தேசியவாதி. அலிகார் முஸ்லிம் யூனிவர்சிட்டியில் MSC, IIM அகமதாபாத்தில் MBA, டெல்லி யூனிவர்சிட்டியில் phD பட்டம் பெற்றவர். டட்ச் வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குனர். மோடியின் நல்லாட்சியால் ஈர்க்கப்பட்டு தன் பதவியை ராஜினாமா செய்து பாஜகவில் இணைந்தவர் இவர்.

இங்கு தேசப்பற்றும், திறமையுமே உங்கள் உயரத்தை தீர்மானிக்கும். சாதி மதமோ, வாரிசு அரசியலோ அல்ல.

# பணிந்து வரும் சீனா



இது பழைய பாரதம் அல்ல, திருப்பி அடிக்கும் வல்லமை அதற்கு உண்டு, என சமீபகால பாரதத்தின் நடவடிக்கைகளில் சீனா மட்டுமல்ல உலகமே கண்டுகொண்டுள்ளது. தற்போது ரஷ்யாவில் SCO நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள பாதுகாப்புத் துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் சென்றுள்ளார். இந்த கூட்டத்தில் நம் பாரதத்துடன் சமரசம் பேச வாய்ப்பை ஏற்படுத்தி தர சீன பாதுகாப்பு அமைச்சர் ரஷ்யாவை நச்சரித்துள்ளார். சரி சந்திப்போம் என பாரதம் இறங்கி வந்துள்ளது. பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அமெரிக்காவும் மத்தியஸ்தம் செய்ய தயார் என்கிறது.

முன்பு முடிவு செய்யும் அதிகாரம் சீனா, ரஷ்யா, அமெரிக்காவிடம் இருக்கும், பாரதம் கட்டுப்படும். ஆனால் தற்போது முடிவு செய்யும் இடத்தில் பாரதம் உள்ளது.

# PUBG க்கு மாற்று FAU-G கேம்




சமீபத்தில் தடைசெய்யப்பட்ட PUBG விளையாட்டுக்கு பதிலாக FAUG என்ற ஆன்லைன் விளையாட்டை பிரபல பாலிவுட் நடிகர் அக்ஷய் குமார் அறிமுகப்படுத்தியுள்ளார். பிரதமர் மோடியின் ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் இந்த செயலி வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்திய இராணுவ வீரர்களின் வீரத்தை, தியாகத்தை இளைஞர்கள் அறிய முடியும். இந்த செயலி மூலம் வரும் வருவாயில் 20 சதவீதத்தை இராணுவ வீரர்களுக்கு (பாரத் கீ வீர்) கொடுக்க உள்ளார் அக்ஷய் குமார்.

சீர்கெட்டு கிடக்கும் பாலிவுட்டில் இவரை போன்ற சிப்பிக்குள் முத்தாக சிலரும் இருக்கின்றனர்.

# எல்லை கடந்த மனித நேயம் . . .

வடக்கு சிக்கிமில் 17,500 அடி உயரத்தில் உள்ள சீன மக்களுக்கு ஆக்ஸிஜன், உணவு, மருத்துவ உதவிகளை நம் பாரத ராணுவம் செய்து வருகிறது. எல்லைகளை கடந்த மனித நேயத்தை நம் பாரதத்திடம் மட்டுமே காண முடியும்.



# *சிந்தனை செய் மனமே!*

**இருளான வாழ்க்கை என்று**
**கவலை கொள்ளாதே,**
**கனவுகள் முளைப்பது இருளில் தான்.**

# மன நிறைவு . . .



கொரோனாவுக்கு பின் வெகு நாள் கழித்து திறந்த கோயிலுக்கு சென்றேன். குருக்கள் இன்னும் வரவில்லை. அப்போது அங்கு வந்த பக்தர் ஒருவர் சற்றே தயங்கி என்னிடம் சார், நீங்க குருக்கள் வரும் வரைக்கும் இருப்பீங்களா என கேட்டார். ஆம், தலையாட்டினேன். நான் ஒரு மில் தொழிலாளி, வெளியூரில் வேலைக்கு செல்ல வேண்டும், வர ஒரு வாரம் ஆகும், கோவிலுக்கு வந்து ஆறு மாசம் ஆச்சு. முன்பு சனிக்கிழமை இங்கு வருவேன், தட்டில் ரூ.10 போடுவேன் என்றார். சரி, அதற்கு!? என்றேன்.

இந்த கவர்ல ஆறு மாசம் பணம் இருக்கு. இவ்வளவு நாள் கோயிலில் வருமானம் இருந்திருக்காது, அது போக அவர் வேதபாட சாலைகளுக்கு அவர் உதவுகிறார், அதனால் என்னால் முடிந்த சிறு தொகை ரூ.500, ஐயரிடம் சேர்த்து விடுங்கள் என இரண்டு கவர்களை கையில் திணித்துவிட்டு கிளம்பினார். தட்டில் பத்து ரூபாய் மட்டுமே போட வந்த எனக்கு ஏன் இது தோன்றவில்லை? வசதி படைத்த என்னை அந்த தொழிலாளி சிந்திக்க வைத்திருந்தார். வசதியானவர்கள் போடும் நூறு ரூபாயை விட கஷ்டப்படுபவர்கள் கொடுக்கும் பத்து ரூபாய் உயர்வுதான். உண்டியலில் போட்ட பணம் அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளின் சொகுசு வாழ்க்கைக்கு செலவாகும் செய்திகளும் என்னை சிந்திக்க வைத்தது. எவ்வளவு கஷ்டப்பட்டாலும், நம் சம்பிரதாயங்களை கைவிடாமல் காக்கும் குருக்கள் கண்ணுக்கு உயர்ந்தவராக தெரிந்தார்.

*உடனடியாக தட்டில் போட ATM போய் ரூ. 2000 எடுத்து வந்துவிட்டேன். இப்போது மனம் நிறைந்திருக்கிறது.*